விலை: 50.00 viber : 076 636 3378
பக்கங்கள் : 12

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 253 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 13 திங்கட்கிழமை (29.08.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

# அரசியல் கைதிகள் விடுதலை, இனப் பிரச்சினைக்கான தீர்வு

## இலங்கை அரசுக்கு நிபந்தனை விதித்தது புலம்பெயர் தமிழ் அமைப்புகள்

(கொழும்பு)

**இலங்கை அரசுக்கு உதவுவதற்கும் பேச்சுவார்த்தையை தொடர்ந்து முன்னெடுப்பதற்கும் புலம்பெயர் தமிழ் அமைப்புகள் இலங்கை அரசுக்கு இரு நிபந்தனைகளை விதித்துள்ளன. அந்தவகையில் அரசியல் கைதிகளை விடுதலை செய்தல், இனப் பிரச்சினைக்கான தீர்வை உடன் வழங்கல் ஆகிய இரு நிபந்தனைகளை விதித்துள்ளன.**

புலம்பெயர் தமிழர்களின் தடைகளை நீக்கிய அரசாங்கம் அவர்களுடன் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளது.

முதலாவது கலந்துரையாடல் தொலைத் தொடர்பின் ஊடாக கடந்த 21ஆம் திகதி இடம்பெற்றது.

நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுடன் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலின் போது நீதி மற்றும் சமத்துவத்திற்கான கனேடியர்கள் என்ற கனடாவை தளமாகக் கொண்ட புலம்பெயர் அமைப்பு மற்றும் அவுஸ்திரே 11

கணிதப் பிரிவில்

## யாழ்.மத்திய கல்லூரி மாணவன் யாழில் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

நேற்று வெளியாகிய உயர்தரப் 11

## இந்திய மீனவர்கள் அறுவர் கைது

(கொழும்பு)

தலைமன்னார் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொண்ட இந்திய 11

2021 க.பொ.த உ/த

## பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று வெளியாகின


(கொழும்பு)

2021ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று வெளியானதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

2021 க.பொ.த உயர்தரப் பரீட்சை கடந்த பெப்ரவரி மாதம் இடம்பெற்றது.

இப்பரீட்சையின் பெறுபேறுகள் இம் 11

## இலங்கைக்கு எதிராக பிரிட்டன் ஐ.நாவில் புதிய பிரேரணை



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள்சபையின் 51ஆவது கூட்டத் தொடர் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில், இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், மனிதாபிமானச் சட்ட மீறல்கள் தொடர்பில் நீதி மற்றும் பொறுப்புக்கூறலைச் செய்வதற்கான புதிய பிரேரணை ஒன்று கொண்டுவரப்படவுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், பிரிட்டன் தலைமை 11

உயிரியல் பிரிவில்

## மட்டக்களப்பு மாணவன் தேசிய ரீதியில் முதலிடம்



(மட்டக்களப்பு)

நேற்று வெளியாகிய க.பொ.த. உயர்தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் மட்டக்களப்பு காரைதீவைச் சேர்ந்த மாணவன் தேசிய ரீதியில் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளார்.

துவாரகேஸ் என்ற மாணவனே 11

## எலிக் காய்ச்சலால் இராணுவ சிப்பாய் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கீரிமலை இராணுவ முகாமில் கடமையாற்றிய இரா 11

கலைப்பிரிவில்

## வாழ்வக மாணவி யாழ்.மாவட்டத்தில் முதலிடம்



(யாழ்ப்பாணம்)

நேற்று வெளியான உயர்தரப் பரீட்சை முடிவுகளில் வாழ்வக மாணவர்கள் இருவரில் யா/வேம்படி மகளிர் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவியான செல்வி உஷா கேசவன் ஊடகக் கற்கை, இந்து நாக 11

## 62.9 சதவீதம் பேர் பல்கலைக்கு தகுதி

(கொழும்பு)

2021ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் 171,497 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றுள்ளனர் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பித்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கையில் 62.9 சதவீதம் பேர் பல 11

கடன் மறுசீரமைப்பு விவகாரம்

## இந்திய நிதியமைச்சருக்கு ஜனாதிபதி ரணில் கடிதம்

(கொழும்பு)

கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இந்தியாவின் உதவியைக் கோரி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமனிற்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்

சர்வதேச நாணயநிதியத்தின் பிரதிநிதிகள் குழுவினர் இலங்கைக்கு வருவதற்கு முன்னரே ஜனாதிபதி தன்னை பேச்சுவார்த்தைகளிற்கு தயார் படுத்தி வந்துள்ளார். 11

யாழில் ஆங்கில மொழி மூலம் உயிரியல் பிரிவில்

## முதல் மூன்று இடங்களிலும் யாழ்.இந்துக் கல்லூரி

(யாழ்ப்பாணம்)

நேற்று வெளியாகிய கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் யாழ்.மாவட்டத்தில் ஆங்கில மொழி மூலம் உயிரியல் பிரிவில் முதல் மூன்று இடங்களையும் யாழ்.இந்துக் கல்லூரி தன்வசப்படுத்தியுள்ளது. 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வடக்காற்று' இலக்கிய விளக்கக்காட்சி

(யாழ்ப்பாணம்)

புகழ்பூத்த இலக்கியவாதி கலாநிதி ரத்ன ஸ்ரீ விஜேசிங்ஹவின் வடக்காற்று அழகான மாலைப்பொழுது எனும் இலக்கிய படைப்பின் விளக்கக் காட்சி நாளை செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணியளவில் சாவகச்சேரியில் அமைந்துள்ள தென்மராட்சிகலாசார மண்டபத்தில் நவீன எண்ணங்கள் மற்றும் நாம் நண்பர்கள் நிறுவனத்தினரின் ஒழுங்குபடுத்தலின் கீழ் இடம்பெறும். (4:7)


வீடுகளுக்கு வந்து அனைத்து விதமான வேலையும் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு:- (12521)

076 570 4018


# உயர்தரப் பரீட்சையில் யாழ். இந்து 41 3A வேம்படி மகளிர் 34 3A

(யாழ்ப்பாணம்)


நேற்று வெளியாகிய கல்விப்பொதுத் தராதரப் உயர்தர பரீட்சை 2021 பெறுபேற்றின் அடிப்படையில்,

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்கள் மொத்தமாக 41 பேர் 3A சித்திகளையும் 20 பேர் 2AB சித்திகளையும் பெற்றுள்ளனர்.

அத்துடன் வேம்படி உயர்தரப் பெண்கள் பாடசாலையினை பொறுத்த வரையில் 34 பேர் 3A சித்திகளை பெற்றுள்ளனர். (4-7)

நேற்று நடைபெற்ற
என் அரசியல் ஆசான்
அமரர்.
## அருணாசலம் தங்கத்துரை

அவர்களின் **உருவச்சிலை நிறுவி நினைவு மலரும்** வெளியிட்ட
கிளிவெட்டி ஏற்பாட்டுக்
குழுவினருக்கு கோடானுகோடி
நன்றிகள்!!!



**தங்க.முகுந்தன்**
**முன்னாள் யாழ். மாநகர**
**சபை உறுப்பினர் TULF**
**மூளாய்.** **077 727 9238**

(C-4806)

## மரண அறிவித்தல்

## சின்னத்துரை கருணாமூர்த்தி



தாவடி வடக்கு, கொக்குவிலைச் சேர்ந்த சின்னத்துரை கருணாமூர்த்தி அவர்கள் நேற்று (28.08.2022) காலமானார்.

அன்னார் சின்னத்துரை - பரமேஸ்வரியின் ஏக புதல்வரும் மல்லாகம் திரு.திருமதி சதானந்தன் தனலட்சுமியின் மருமகனும் வாசுகியின் அன்புக் கணவரும் துஷித்தா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), துஷித்தன் (யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி), டுசிதா (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.08.2022) அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தாவடி வடக்கு,
கொக்குவில்.


(12597)

தகவல்:
குடும்பத்தினர்

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் சங்கரப்பிள்ளை இராமநாதன்

### (ஓய்வுபெற்ற இ.போ.ச. சாரதி)



**பிறப்பு:- 28.01.1935** **இறப்பு:- 09.09.2021**

ஆண்டு ஒன்று முடிந்ததுவோ உங்கள்
அன்பு முகம் நீங்கிச் சென்று
ஆனாலும் எம் மனமோ இன்னும் ஆறவில்லை – அப்பா
நேற்றுப் போல் இருக்குதப்பா
அழுத பொழுதுகள் காலங்கள் பல
கடந்தாலும் என்றும் எம் மனதில்
காவியமாய் இருப்பீர்கள் அப்பா.

அன்னாரின் 1ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நாளைய தினம் 30.05.2022) தொண்டைமானாறு **செல்வச்சந்நிதி ஆலய பாலேந்திரா ஐயர் மடத்தில்** மதியம் 12 மணிக்கு நடைபெறவுள்ளது. இவ்அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

* நிகழ்வுக்கு செல்வதற்கான வாகன ஒழுங்குகள் காலை 10 மணிக்கு பருத்தித்துறை வீ.எம்.வீதியில் இருந்தும் மட்டுவிலில் இருந்தும் செல்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

தகவல்: **பிள்ளைகள்**

(C-4805)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### இன்று முதல்

# தனியார் பேருந்து சேவையை மட்டுப்படுத்த தீர்மானம்

(கொழும்பு)

**எரிபொருள் விநியோக கட்டமைப்பில் மீண்டும் ஏற்பட்டுள்ள நெருக்கடியினால் இன்று முதல் தனியார் பேருந்து போக்குவரத்து சேவை மட்டுப்படுத்தப்படும். அதற்கமைய நாடுதழுவிய ரீதியில் தனியார் பேருந்துகள் 25 சதவீதமளவில் மட்டுப்படுத்தப்படும் என அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.**

தனியார் பேருந்து போக்குவரத்து சேவை தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கியு ஆர் முறைமைக்கு கீழ் எரிபொருள் விநியோகம் கடந்த நாட்கள் முறையாக விநியோகிக்கப்பட்டன. தற்போது மீண்டும் எரிபொருளுக்கான வரிசை தோற்றம் பெற்றுள்ளதை அவதானிக்க முடிகிறது.

எரிபொருள் விநியோக கட்டமைப்பில் மீண்டும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் இன்று முதல் தனியார் பேருந்து போக்குவரத்து சேவை மட்டுப்படுத்தப்படும்.

அதற்கமைய இன்று முதல் 25 சதவீத பேருந்துகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்படமாட்டாது.தனியார் பேருந்துகளுக்கு எரிபொருள் விநியோகத்தில் முறையான நடவடிக்கையினை எடுக்குமாறு வலுசக்தி அமைச்சிடம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம் என மேலும் தெரிவித்தார். (4)

# பேர்ள் கப்பல் விபத்து
## மீனவர்களுக்கு மேலும் இழப்பீடு

(கொழும்பு)

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் ஏற்பட்ட தீ விபத்தில் பாதிக் கப்பட்ட இலங்கை மீனவர்களுக்கு இழப்பீடாக மேலும் 9110 இலட்சம் ரூபா கிடைத்துள்ளதாக கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது. குறித்த கப்பலின் காப்புறுதி நிறுவனத்தினால் இந்த இடைக்கால இழப்பீட்டு தொகை வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னரும் குறித்த காப்புறுதி நிறுவனத்தினால் இரண்டு தடவைகள் இடைக் கால இழப்பீட்டு தொகையாக 3480 இலட்சம் மற்றும் 3350 இலட்சம் ரூபா வழங்கப்பட்டது.

அதற்கமைய கம்பஹா, கொழும்பு, களுத்துறை மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்டுள்ள 15,032 மீனவர்களுக்கு இந்த தொகை பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக பாதிக்கப்பட்ட அனைத்து மீனவர்களுக்கும் அவர்களின் படகுகளின் வகைகள், மீன் பிடிக்கும் முறை மற்றும் இழந்த வருமானம் என்பவற்றின் அடிப்படையில் 80,000 முதல் 240,000 வரையில் நட்டயீட்டுத் தொகை வழங்கப்படவுள்ளது. (4)

# மின்கசிவு காரணமாக விடுதி ஒன்றில் தீ விபத்து
## யாழில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல விடுதி ஒன்றில் நேற்று ஏற்பட்ட தீ விபத்தில், விடுதி அறையில் தங்கியிருந்த கனடா நாட்டினை சேர்ந்தவர்களின் உடமைகள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

குறித்த விடுதியில் அவர்கள் தங்கி இருந்த விடுதி அறையில் பொருத்தப்பட்டு இருந்த குளிரூட்டியில் ஏற்பட்ட மின் கசிவு காரணமாகவே தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

குறித்த விடுதி அறையில் தீ விபத்து ஏற்பட்ட போது விடுதி பணியாளர்கள் விரைந்து செயற்பட்டமையால் தீ மேலும் பரவாமல் தடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (4-33-104)

# வாள் வெட்டுச் சம்பவத்தில் ஒருவர் படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தனங்கிளப்பு பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இடம் பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் நபரொருவர் படுகாயமடைந்துள்ளார்.

தனங்கிளப்பு பகுதியில் உள்ள வீடொன்றிற்குள் புகுந்து வாள்வெட்டு குழு நடத்திய தாக்குதலில் 33 வயதான நபரொருவர் தலை மற்றும் முகப் பகுதிகளில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த வன்முறைச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-30)

### டீசல் பெற தவறிய
# விவசாயிகளுக்கு இறுதி சந்தர்ப்பம்

(சாவகச்சேரி)

2022/2023 ஆம் ஆண்டு காலபோக நெற்செய்கைக்கான டீசலை பெறத் தவறிய கைதடி கமநல சேவை பிரிவுக்குட்பட்ட நெற்செய்கையாளர்கள் இன்று திங்கட்கிழமை தமக்கான டீசலைப் பெற்றுக்கொள்ள முடியும் என கமக்கார அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

இதுவே விவசாயிகளுக்கு டீசல் வழங்கும் இறுதிச் சந்தர்ப்பம் என்பதால் டீசல் பெறத் தவறிய செய்கையாளர்கள் குடும்ப அட்டை,ஏக்கர் விரிச் சிட்டை மற்றும் தேசிய அடையாள அட்டையுடன் கைதடி கமநல சேவை நிலையத்திற்கு சென்று தமக்கான உழவு டீசலைப் பெற்றுக் கொள்ள முடியும் என மேலும் அவர்கள் தெரியப்படுத்தியுள்ளனர். (4-30)

### பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கு
# புதிய உறுப்பினர்கள்

(அராலி)

வடமாகாண பொதுச் சேவை ஆணைக்குழு உறுப்பினர்களின் பதவிக்காலம் நிறைவடைந்த நிலையில் புதிய உறுப்பினர்களை நியமிப்பதற்கு வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா நடவடிக்கை எடுத்துள்ளார்.

5 பேரை உள்ளடக்கிய வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் காலம் கடந்த ஜூலை மாதத்துடன் 5 வருட பதவிக்காலம் நிறைவடைந்த நிலையில் புதிய உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக ஆளுநர் நடவடிக்கை எடுத்துவருவதாக ஆளுநர் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (4-104)

# வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளுக்கு தீ வைப்பு
## மானிப்பாயில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மானிப்பாய் இந்துக் கல்லூரி வீதியில் அமைந்துள்ள வீட்டின் மீது நேற்று அதிகாலை 2 மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிவிக்கையில்,

வீட்டிற்குள் அத்துமீறி உள்நுழைந்த கும்பல் ஒன்று வீட்டு ஜன்னல்கள் மற்றும் கதவுகளை உடைத்து விட்டு, அங்கு நின்ற மோட்டார் சைக்கிளுக்கும் தீ வைத்துவிட்டு தப்பிச் சென்றுள்ளது. இதனால் மோட்டார் சைக்கிள் முற்றாகவே எரிந்து நாசமாகியுள்ளது.

இச்சம்பவம் குறித்து மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-33-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறைடேர்ஸ் பிறிமியர் வெற்றிக்கிண்ணம்-2022 சுழிபுரம் கிறீன் டிரகன் அணிக்கு முதல் வெற்றி



பிறைடேர்ஸ் பிறிமியர் வெற்றிக்கிண்ணம் -2022 தொடரின் முதலாவது போட்டியில் சுழிபுரம் கிறீன் டிரகன் அணி, அரியாலை கில்லாடிகள் 100 அணியை 31 ஓட்டங்களால் வெற்றி பெற்று தமது முதலாவது வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற அரியாலை கில்லாடிகள் 100 அணி களத்தடுப்பை தீர்மானித்ததால், முதலில் துடுப்பெடுத்தாடிய சுழிபுரம் கிறீன் டிரகன் அணி 20 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றனர்.

துடுப்பாட்டத்தில் மோகன்ராஜ்-21, பிரசாந்-40, சிந்து-16, ஜெயதர்ஸன்-26, துஸ்யந்தன்-34 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கிரிஸாந் 04 ஓவர்களில் 16 ஓட்டங்களைக் கொடுத்து 05 இலக்குகளையும் பிரதீஸன் 03 ஓவர்களில் 34 ஓட்டங்களை கொடுத்து இலக்குகள் எதுவும் இல்லாமல், சஜன்-04 ஓவர்களில் 34 ஓட்டங்களைக் கொடுத்து 01 இலக்கினையும் சுகீதன் -04 ஓவர்களில் 35 ஓட்டங்களைக் கொடுத்து 01 இலக்கினையும் வினுஷாந் 02 ஓவர்களில் 13 ஓட்டங்களை கொடுத்து 01 இலக்கினையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அரியாலை கில்லாடிகள் 100 அணி 19 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 132 ஓட்டங்களை பெற்றனர்.

துடுப்பாட்டத்தில் பியற்றிக்-33, இன்துஜன்-13, கிரிஷாந்-28, லம்போ-12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் லிங்கநாதன் 04 ஓவர்களில் 11 ஓட்டங்களை கொடுத்து 03 இலக்குகளையும் மோகன்ராஜ் 04 ஓவர்களில் 15 ஓட்டங்களைக் கொடுத்து 01 இலக்கினையும் பிரதீஸ் 04 ஓவர்களில் 31 ஓட்டங்களைக் கொடுத்து 01 இலக்கினையும் தீபன் -02 ஓவர்களில் 20 ஓட்டங்களைக் கொடுத்து 01 இலக்கினையும் துஸ்யந்தன் 02 ஓவர்களில் 17 ஓட்டங்களை கொடுத்து 02 இலக்கினையும் கைபற்றினர்.

சுழிபுரம் கிறீன் டிரகன் அணியைச் சார்ந்த பிரசாந் போட்டியின் சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டார்.(க-4)

## அமரர்.ஜெபநேசன் ஞாபகார்த்த காற்பந்தாட்ட தொடர்

### இளவாலை சென்லூட்ஸ் சம்பியன்

அமரர்.ஜெபநேசன் ஞாபகார்த்தமாக இரணைப்பாலை சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியில் நடத்தப்பட்ட காற்பந்தாட்ட தொடரில் இளவாலை சென்லூட்ஸ் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இதன் இறுதியாட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் இளவாலை சென்லூட்ஸ்அணியை எதிர்த்து இளவாலை யங் கென்றிஸ் அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பம் முதல் இறுதி வரை இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்களல்ல என்பதனை நிரூபிக்கும் முகமாக விளையாடினர்.

இதனால் இரு அணிகளாலும் கோல் எதனையும் பதிவு செய்ய முடியவில்லை. இதனால் சமநிலை தவிர்ப்பு உதைமூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது.




இதில் இளவாலை சென்லூட்ஸ் அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டது. (4-90)




கயேந்தினி




சியானி




யனனி




கஜன்




வேதியன்




ரம்மியா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவின் கருத்துக்களுக்கு இந்தியா கடும் கண்டனம்

(கொழும்பு)

**அடிப்படை இராஜதந்திர நெறிமுறைகளை மீறும் வகையில் இலங்கைக்கான சீனத் தூதுவர் பல கருத்துக்களை வெளியிட்டுள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் குற்றம் சாட்டியுள்ளது.**

இலங்கையின் இறையாண்மை, சுயாதீனம் மற்றும் ஒருமைப்பாடு மீறப்படுவதை சீனா எந்தச் சந்தர்ப்பத்திலும் சகித்துக்கொள்ளாது என இலங்கைக்கான சீனத் தூதுவர் கூறியிருந்தார்.

தாய்வான் நீரிணையின் இராணுவ மயமாக்கல் மற்றும் சீனாவின் யுவான் வாங் 5 கப்பலின் அம்பாந்தோட்டை வருகை ஆகியவற்றை தொடர்புபடுத்தி அவர் இந்த கருத்தை வெளியிட்டமைக்கு இந்திய உயர்ஸ்தானிகராலயம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கு வடக்கே அமைந்திருக்கும் அயல்நாட்டின் மீதான அவரது நோக்கு, அவரது சொந்த நாட்டினுடைய நடத்தையின் பிரதிபலிப்பாக இருக்கலாம் என்றும் தெரிவித்துள்ளது.

விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சிக்குரியதெனக்கூறப்படும் கப்பலொன்றின் வருகைக்கு பூகோள அரசியல் சூழலை பொருத்துவிக்கும் அவரது நடவடிக்கை ஒரு பாசாங்கான செயல் என்றும் விமர்சித்துள்ளது. (4)

# நாட்டில் வங்கி கட்டமைப்பு விரைவில் முடங்கும் அபாயம்

## கொழும்பு பல்கலை.பேராசிரியர் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் உள்ள வங்கிகளின் செயற்பாடு விரைவில் முடங்கும் அபாய நிலை நிலவுவதாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ மற்றும் நிதி பீடத்தின் பேராசிரியர் நிஹால் ஹென்நாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் வங்கிகள் ஊடாக பெற்ற கடன்களை பல வங்குரோத்து அரச நிறுவனங்கள் செலுத்தத் தவறியதன் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் 2021 ஆம் ஆண்டு அரசாங்கம் சுமார் 200 பில்லியன் ரூபாவை கல்வி நடவடிக்கைகளுக்காக செலவிட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை, அந்த ஆண்டில் ஸ்ரீ லங்கா எயார்லைன்ஸ் நிறுவனத்தில் மாத்திரம் ஒரு பில்லியன் ரூபாவிற்கும் அதிகமான நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு இதுவரையில் ஏற்பட்ட நட்டம் 700 பில்லியனை அண்மித்துள்ளது.

இவ்வாறான சூழலில், சர்வதேச நாணய நிதியத்தின் மீது முழு நம்பிக்கை வைப்பதை விட, நாட்டிற்கு அதிக பொறுப்புகள் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரச பல்கலைக்கழகங்கள் வழங்கும் இலவசக் கல்வியின் பெறுமதியை அவற்றில் கல்வி கற்கும் மாணவர்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்றும் பேராசிரியர் நிஹால் ஹென் நாயக்க வலியுறுத்தினார்.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து 4 பில்லியன் டொலர்களை பெற்றுக்கொள்வதில் கவனம் செலுத்துவதற்கு பதிலாக நாட்டில் அதிக கவனம் செலுத்த வேண்டிய பல்வேறு துறைகள் உள்ளதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (4)

# பொலிஸ் சட்டப் பிரிவின் தலைவராக ருவன் குணசேகர



(கொழும்பு)

இலங்கை பொலிஸ் சட்டப் பிரிவின் பணிப்பாளராக முன்னாள் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர நியமிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவினால் புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொதுப்பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் ஒப்புதலுக்கு உட்பட்டு கடந்த 22 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (4)

# கட்டட நிர்மாணப் பொருட்களின் விலைகளைக் குறைக்க நடவடிக்கை

(கொழும்பு)

பொருளாதார நெருக்கடி காரணமாக அதிகரித்த சிமெந்து, கம்பி மற்றும் இரும்பு ஆகியவற்றின் விலைகளை குறைப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

வர்த்தக மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கோழிஇறைச்சி மற்றும் மீனின் விலை குறைப்பு தொடர்பில் அடுத்த வாரம் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

சந்தையில் கோழி இறைச்சியின் விலை தொடர்பான தரவுகள் நுகர்வோர் விவகார அதிகாரசபையிடம் இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை அண்மையில் முட்டையின் விலைக்கு அரசாங்கம் விலை நிர்ணயம் செய்த போதிலும் சந்தையில் போதியளவு முட்டை விற்பனைக்கு இல்லை என மக்கள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (4)

# எரிபொருள் நிரப்பு நிலையங்கள் வெளிநாட்டு நிறுவனங்கள் வசம்

(கொழும்பு)

இலங்கையில் வெகு விரைவில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான சுமார் 500 முதல் 700 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அடுத்த நான்கு மாதங்களுக்கு எரிபொருட்களை கொள்வனவு செய்ய 2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படும் என்ற அடிப்படையில் அதற்கான டொலர்களை தேடும் வாய்ப்புகள் அரிதாகவே காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அடுத்த மாதத்திற்கான டீசல், பெற்றோல் மற்றும் கச்சா எண்ணெய் தேவைகளை இறக்குமதி செய்வதற்காக 200 மில்லியன் அமெரிக்க டொலர்களை விடுவிக்குமாறு திறைசேரி மற்றும் மத்திய வங்கியிடம் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (4)

# இராசிபலன்

29.08.2022
ஆவணி 13 , திங்கட்கிழமை
துதியை பிற்பகல் 3.33 மணிவரை

உத்தரம் பின்னிரவு 12.01 மணிவரை
சுபநேரம் 12.05-1.35 மணிவரை
இராகுகாலம் 7.35-9.05 மணிவரை

சந்திராஷ்டமம்
அவிட்டம், சதயம்

வளவன்



தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள்.



கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், காரிய அனுகூலமுண்டு.



சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம் பெறலாம்.



அரைகுறையாக இருந்த பணிளை மீதியும் தொடர்வீர்கள், உங்களின் திறமைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும், வழிபாட்டில் ஆர்வம் கூடும், புதிய முயற்சிகள் கைகூடும்.



அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள்.



புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், வாய்ப்புக்கள் உங்களை நாடி வரலாம்.



பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.



நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்.



பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பிரபலமானவர்களின் சந்திப்புக்கள் இடம் பெறலாம்.



விரும்பிய உணவுப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சிந்தனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.



குடும்ப ஒற்றுமை கூடும், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.



நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, உறவினர்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

எதைத் தேடி நாம் அலைகின்றோமோ அது நமக்குள்ளே இருக்கிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

அம்புலிமாமா


## மன மயக்கம்

(நேற்றைய தொடர்சி)

அவ்வீட்டுக்காரனோ "என்ன இது? பாதி ராத்திரியில் யாரையோ கொண்டு வந்து புண்ணியம் என்று உளறுகிறாயே" என்று கத்தினான். அவன் மகாக் கஞ்சன். முடிவில் அவன் "சரி. சரி அவர்களை இருக்க வீடு சாப்பிட ஏதாவது இருந்தால் கொடு. எங்கே இருக்கப் போகிறது? பாத்திரத்தில் பருக்கைகள் தான் ஒட்டி மிஞ்சி இருக்கும். ஆனால் ஜாக்கிரதை. அவர்கள் மீது ஒரு கண் வைத்திரு" என்றான்.

சிறுவன் பாத்திரங்களில் ஒட்டி இருந்த பருக்கைகளை எல்லாம் சேகரித்து எடுத்து அதில் பாதியை முனிவருக்குக் கொடுத்து விட்டு மீதப் பாதியைத் தானும் தின்றான். சற்று நேரத்தில் மழை நின்றது. வேலைக்காரன் வந்து வெளியே போகச் சொல்லுமுன் தாமே போய் விடலாமென எண்ணி அவர்கள் எழுந்து வந்தார்கள்.

வீட்டு வாசலைக் கடக்குமுன் சிறுவன் அங்கு நின்ற வேலைக்காரனிடம் தான் திருடி எடுத்து வந்த தங்கக் கிண்ணத்தைக் கொடுத்து "அப்பனே! அகாலத்திலும் நீ உன் எஜமானனிடம் சொல்லி எங்களுக்கு இடமளித்தாய். இங்கு கிடைத்த உணவும் எங்கள் பசியைத் தணித்தது. உங்களைப் போன்ற ஒரு சில நல்லவர்கள் இருப்பதால் தான் உலகம் நிலைத்திருக்கிறது. உங்கள் உதவிக்கு ஏழேழு பிறப்பு எடுத்து நன்றி செலுத்தினாலும் அக்கடன் தீராது. என்னால் முடிந்தது இது தான். இதை நீயும் உன் எஜமானனும் வைத்துக் கொள்ளுங்கள்" என்றான்.



சிறுவனின் இச்செயல் மிகவும் விசித்திரமாக முனிவருக்குப் பட்டது. அவருக்குக் கோபம் வந்தது. சிறுவனைக் கண்டிக்க எண்ணிய போதிலும் அப்போது அவர் எதுவும் கூறாமல் தம் கோபத்தை அடக்கிக் கொண்டார்.

அப்போது சிறுவன் "ஐயனே! என் செயல்கள் தங்களைக் குழப்புகின்றனவா? இது நான் ஆடும் நாடகம். உங்கள் சந்தேகங்களைத் தீர்க்கவே நான் வந்தேன். முதலில் நமக்கு நல்ல விருந்து அளித்த பணக்காரன் புகழ்பெற ட்ம்பமாக வாழ்பவன். அவன் கடனில் மூழ்கித் தத்தளிக்கிறான். அவனிடம் இருந்த ஒரே விலையுயர்ந்த பொருள் தங்கக் கிண்ணம்தான். அதை இழந்ததால் அவன் இனி திருந்தி விடுவான். படாடோப வாழ்க்கை வாழாமல் சிக்கனமாக வாழ்வான். இவ்வாறு அவன் குடும்பத்தைக் காப்பாற்றி விட்டேன்" என்றான்.

அப்போது முனிவர் "அது சரி அந்தக் கிண்ணத்தை மகாக் கஞ்சனுக்கு ஏன் கொடுத்தாய்?" என்று கேட்டார். சிறுவனும் "அந்தக் கஞ்சன் யாருக்குமே எதையும் கொடுத்துப் பழக்கப்பட்டவன் அல்ல பணத்தை வாங்கிப் பூட்டி வைக்கத்தான் தெரிந்தவன். நான் கொடுத்த தங்கக் கிண்ணம் அவனது மனதை மாற்றி இருக்கிறது. ஒரு சில பருக்கைகள் கொடுத்தால் ஒரு தங்கக் கிண்ணமே கிடைத்தது என்றால் மற்ற பொருட்கள் கொடுத்தால் இன்னும் என்னென்ன கிடைக்குமோ என்று எண்ணுகிறான்.

இனி அவன் பிறருக்குக் கொடுக்கும் பழக்கம் பெற்று விடுவான். இனி அவனது பணத்தால் மற்றவர்கள் நன்மை அடைவார்கள்" என்றான்.

முனிவரும் "எனக்கு ஏற்பட்ட சந்தேகங்கள் தீர்ந்து விட்டன" என்று கூறி அச்சிறுவனைப் பார்த்தார். அப்போது அவன் நின்ற இடத்தில் ஒளி வீசியது. ஒரு விமானம் ஆகாயத்திலிருந்து இறங்கி வந்தது. சிறுவன் அதில் அமர்ந்து மாயமாய் மறைந்து போனான்.

முனிவர் நிறை மனத்துடன் மறுபடியும் விந்திய மலைக் காட்டிற்கே திரும்பிச் சென்றார்.

(முற்றும்)

# சிலப்பதிகாரம்


## என் வழி தனி வழி

நீங்கள் எந்த வழியைத் தேர்ந்தெடுக்கப் போகிறீர்கள்?

கவுந்தி அடிகள் சில விநாடிகள் யோசித்தார்.

வாழ்க்கையிலும் நாம் நினைத்ததை அடைய மூன்று வழிகள் உண்டு. சீக்கிரம் சென்றடையக் கடுமையான வழி. அதாவது நம்மை வருத்திக் கொண்டு மிகக் கடுமையாக உழைக்கிற வழி. அது வலப்புற வழியைப் போன்றது.

இன்னொன்று தந்திரமான வழி சலுகைகளைப் பயன்படுத்திக் கொண்டு முன்னேறுகிற வழி அது. இடப்புற வழியைப் போன்றது. தேவதை தருகிற சலுகையைப் பயன்படுத்திக்கொள்கிற குறுக்கு வழி.




மற்றது நேரான வழி நீண்ட வழி இயற்கையாக நேரும் தடங்கல்களை நியாயமாகச் சந்தித்து முன்னேறுதல்.

குறுக்கு வழிகள் ஞானிகளுக்குப் பிடிக்காது. நீண்ட வழியில் நெடுந்தூரம் கண்ணகியை நடக்க வைக்கவும் கவுந்தியடிகளுக்கு விருப்பம் இல்லை.

ஆகவே அவர் சீக்கிரம் சென்றடைகிற. ஆனால் சற்றுக் கடுமையான வழியைத் தேர்ந்தெடுத்தார்.

கவுந்தி அடிகள் துறவியைப் பார்த்து ஐயா இந்திரன் அருளிய ஐந்திறம் நூலில் சொல்லப் பட்டிருக்கும் உயர்ந்த கருத்துகள் அருகப் பெருமான் அருளிய பரமாகமத்திலேயே இருக்கின்றன. சமணத் துறவிகள் ஒவ்வொருவரும் அதைக் கசடறக் கற்றிருப்பதோடு நாடெங்கும்சென்று மக்களுக்கும் எடுத்துச் சொல்கிறார்கள்.

ஆகவே ஐந்திறம் கற்ற பலன் பெற வேண்டிய அவசியமில்லை. சென்ற பிறப்பின் பலனை இப் பிறப்பில் கண்கூடாகப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அதனால் முற்பிறப்பின் வினைகளை அறியத் தேவை இல்லை வாய்மை தவறாது.

இம் மண்ணில் பிறந்த உயிர்கள் எதற்கும் தீங்கு நினைக்காது இருப்பவர்களுக்கு கிடைக்காத அரும் பொருள் எதுவுமில்லை. ஆகவே அந்த மூன்று பொய்கைகளில் எதிலும் நீராடி எந்தப் பலனையும் பெற வேண்டியதில்லை. அதனால் இடப்புற வழி எங்களுக்குத் தேவையில்லை என்றார்.

அதேசமயம் இடை வழியில் நெடுந்தூரம் செல்கிற நிலையிலும் நாங்கள் இல்லை இந்த வேனிற் காலத்தில் இளங்கொடி போன்ற இந்தப் பெண்ணை நெடுந்தூரம் நடக்க வைக்க நான் விரும்பவில்லை.

கடுமையானதாக இருந்தாலும் நாங்கள் வலப்புற வழியிலேயே போகிறோம். நீங்கள் திருமாலை வழிபடப் புறப்படுங்கள் என்று விளக்கமாக பதில் சொன்னார் அவர்.

கவுந்தி அடிகளின் தெளிவு கோவலனையும் கண்ணகியையும் ஆச்சரியப்பட வைத்தது.

ஆனால் நாம் எத்தனை தெளிவாக இருந்தாலும் நேரிடவேண்டிய குழப்பம் நேர்ந்தே தீரும் நேர்ந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 62

**ஏப்ரல் 2010 இல், கடுமையான பாராளுமன்ற விவாதத்தைத் தொடர்ந்து, உக்ரைன் செவாஸ் டோபோல் துறைமுகத்தின் ரஷ்யா வினுடனான குத்தகையை நீடிக்க ஒப்புக்கொண்டது. இக் குத்தகை முதலில் 2017 இல் காலாவதியாக இருந்தது. அதை 2042 வரை நீடிக்க ஒப்புக்கொண்டது.**

**2011 இல், நாட்டின் மிகவும் பிரபலமான அரசியல்வாதியான முன்னாள் பிரதமர் யூலியா திமோஷென்கோ, ரஷ்யாவுடனான 2009 இயற்கை எரிவாயு ஒப்பந்தம் தொடர்பாக அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு ஏழு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.**

பெப்ரவரி 2012 இல், யூலியா திமோஷென்கோவின் உள்துறை மந்திரி யூரி லூட்சென்கோவும் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு நான்கு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார். பல பார்வையாளர்கள் இவ்விரண்டு நடவடிக்கைகளும் அரசியல் உள்நோக்கம் கொண்டவை என்று தெரிவித்தனர்.

2012 கோடையில் UEFA ஐரோப்பிய சாம்பியன்ஷிப் கால்பந்து போட்டியை உக்ரைன் நடத்தியபோது, பல ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் நிகழ்வைப் புறக்கணிப்பதன் மூலம் யூலியா திமோஷென்கோ மீதான தங்கள் கவலையைப் பதிவு செய்தன.

ஒக்டோபர் 2012 இல் நடந்த பாராளுமன்றத் தேர்தலில், ஆளும் கட்சியான பிராந்தியங்களின் கட்சி 185 இடங்களைப் பெற்று பாராளுமன்றத்தில் தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தது. திமோஷென்கோவின் கட்சி 101 இடங்களையும், விட்டலி கிளிட்ச்கோவின் சீர்திருத்தங்களுக்கான உக்ரைனிய ஜனநாயகக் கூட்டணி (UDAR) 40 இடங்களையும் பெற்றன. சுதந்திரம் கட்சி (ultranationalist Svoboda) 37 இடங்களை வென்று வியக்கத்தக்க வகையில் பலம் பெற்றது. முடிவுகளின் செல்லுபடியை சவால் செய்து, திமோஷென்கோ உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினார்.

சில போட்டிகளின் முறைகேடுகள் குறித்து சர்வதேச பார்வையாளர்கள் கவனம் செலுத்தினாலும், ஐரோப்பிய பாராளுமன்றம் தேர்தலை ஒப்பீட்டளவில் நியாயமானதாக வகைப்படுத்தியது. அதைத் தொடர்ந்து முக்கிய எதிர்க்கட்சிகள் அதிகாரபூர்வ முடிவுகளை ஏற்றுக்கொண்டன.

2012 டிசெம்பரில், பிரதமர் அசாரோவ் கம்யூனிஸ்ட் மற்றும் சுயேட்சை பிரதிநிதிகளின் ஆதரவுடன் ஒரு அரசாங்கத்தை அமைத்தார். ஐரோப்பிய ஒன்றியத்துடனான உறவை முறிக்கும் முயற்சியாக பரவலாகக் காணப்பட்ட யானுகோவிச், சிறையில் அடைக்கப்பட்ட லூட்சென்கோவை மன்னித்து ஏப்ரல் 2013 இல் அவரை விடுவிக்க உத்தரவிட்டார். 2012 இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல் பற்றி விரிவாகப் பார்ப்போம்.

### உக்ரேனிய பாராளுமன்றத் தேர்தல்-2012

ஒக்டோபர் 8, 2008 அன்று, உக்ரைனிய ஜனாதிபதி விக்டர் யுஷ்செங்கோ பாராளுமன்றத்தைக் கலைக்க முயன்றார். மேலும் உக்ரைனில் இரண்டாவது முறையாக டிசெம்பர் 7, 2008 இல் முன்கூட்டியே பாராளுமன்றத் தேர்தலை நடத்த தீர்மானித்தார். பாராளுமன்றத்தை கலைக்க ஜனாதிபதியின் உரிமை பற்றி உக்ரைனின் அரசியலமைப்பு நீதிமன்றத்தில் சவால் செய்யப்பட்டது. ஜனாதிபதியின் இவ் ஆணை குறிப்பிட்ட காலத்தில் நடைமுறைப் படுத்தப்படாததால் காலாவதியானது. முன்கூட்டியே தேர்தல் நடத்துவதற்கு எதிரான வாதங்களில் ஒன்று தேர்தல் நடத்துவதற்கேற்படும் செலவுகள் ஆகும். தேர்தல்கள் ஒக்டோபர் 2008 இல் நடத்தினால் சுமார் US$80 மில்லியன் செலவாகும் என மதிப்பிடப்பட்டது. இதனால் முன்கூட்டியே தேர்தல் நடத்தப்படவில்லை.

பெப்ரவரி 1, 2011 அன்று, உக்ரைனிய பாராளுமன்றத்தில் ஒக்டோபர் 28, 2012 அன்று தேர்தல்கள் நடத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டபோதும் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்திற்கு வராததால் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. ஜூலை 27, 2012 அன்று உக்ரைனின் மத்திய தேர்தல் ஆணையம் தேர்தலுக்கான பிரச்சாரம் ஜூலை 30 அன்று தொடங்கும் என்று அறிவித்தது.

**2012 ஆம் ஆண்டு உக்ரேனிய பாராளுமன்றத் தேர்தல் 28 ஒக்டோபர் 2012 அன்று நடை பெற்றது. தேர்தல் முடிவுகளை அறிவிக்க முடியாத நிலை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் பல மீள்வாக்களிப்புக்கள் நடந்தன. இதனால் பல தொகுதிகள் பல்வேறு நேரங்களில் பிரதிநிதித்துவம் இல்லாமல் விடப்பட்டிருந்தன.**

முந்தைய இரண்டு தேர்தல்களைப் போலல்லாமல், இந்தத் தேர்தல் 5% தேர்தல் வரம்புடன் ஒரு இணையான வாக்குப்பதிவு முறையைப் பயன்படுத்தியது (கட்சிப் பட்டியல்களின் கீழ் 50% மற்றும் எளிய பெரும்பான்மைத் தொகுதிகளின் கீழ் 50%). ஆனால் 1998 மற்றும் 2002 ஆண்டுகளில் 50/50 கலப்புத் தேர்தல் முறை பயன்படுத்தப்பட்டது.

(தொடரும்)

# உக்ரைனில் இருந்து ரஷ்யா வரும் மக்களுக்கு நிதியுதவி

## ரஷ்ய ஜனாதிபதி புடின் அறிவிப்பு

(மொஸ்கோ)

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து 6 மாதங்களைக் கடந்தும் சண்டை நடைபெற்று வருகிறது.



இந் நிலையில், உக்ரைனில் இருந்து ரஷ்யாவிற்கு வரும் மக்களுக்கு நிதியுதவி வழங்கும் ஆணையை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் பிறப்பித்துள்ளார்.

பொது மக்களுக்கு நிதியுதவி வழங்கும் ஆணையில் நேற்று அவர் கையெழுத்திட்டார்.

ஓய்வூதியம் பெறுவோர், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் உட்பட உக்ரைனை விட்டு ரஷ்யாவிற்கு வரும் அனைவருக்கும் நிதியுதவி வழங்கப்படும்.

கடந்த பெப்ரவரி 18 முதல் உக்ரைனை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயத்தில் உள்ள மக்களுக்கு 10,000 ரூபிள் மாதாந்த ஓய்வூதியமாக அறிவிக்கப்பட்டுள்ளது. (4)

# 2 கோடி இணையத்தளங்களை முடக்கியது தலிபான் அரசு

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சி பொறுப்புக்கு வந்து ஓராண்டு நிறைவடைந்துவிட்டது. அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு ஆப்கான் மக்களின் பல்வேறு அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக பெண்கள் கல்வி கற்கவும், வேலைக்கு செல்லவும், ஆண்கள் துணையின்றி வெளியே செல்லவும் தடைகளை விதித்துள்ளனர்.

அதுபோல் அங்கு ஊடகங்களுக்கும் கடுமையான கட்டுப்பாடுகள் உள்ளன. இந்த நிலையில் ஒழுக்கக்கேடான விடயங்களை காட்சிப்படுத்தும் 2¼ கோடி இணையதளங்களை முடக்கியுள்ளதாக தலிபான் அரசின் தகவல் தொடர்பு அமைச்சர் நஜிபுல்லா ஹக்கானி தெரிவித்துள்ளார்.

மேலும் இது போன்ற இணையதளங்களை ஒடுக்க, தலிபான் அரசுடன் ஒத்துழைக்க பேஸ்புக் தயக்கம் காட்டுவதாகவும் அவர் குற்றம் சாட்டினார். (4)

# பிலிப்பைன்சில் நடுக்கடலில் தீப்பிடித்த பயணிகள் கப்பல்

(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டின் ஓரியண்டல் மிண்டோரோ மாகாணத்தில் உள்ள கலபன் நகரில் இருந்து பயணிகள் கப்பல் ஒன்று தலைநகர் மணிலாவின் தெற்கு துறைமுகத்தை நோக்கி சென்று கொண்டிருந்தது. அதில் 49 பயணிகள் மற்றும் 38 பணியாளர்கள் இருந்தனர். துறைமுகத்தை நெருங்கியபோது கப்பலில் தீப்பிடித்தது.

அப்போது கப்பல், துறைமுகத்தில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தொலைவில் இருந்தது. கப்பல் முழுவதும் தீ பரவியதால் பலர் கடலில் குதித்தனர்.

உடனே கடலோர காவல் படையினர் விரைந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர். கடலில் தத்தளித்தவர்களை மீட்டனர்.

80 இற்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டனர். 2 பேரை காணவில்லை. அவர்களை தேடி வருகின்றனர். கப்பலின் என்ஜினில் ஏற்பட்ட கோளாறு காரணமாக தீப்பிடித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆவணி மாத இராசி பலன்கள்

## 17.08.2022 - 17.09.2022



**எந்த காரியத்திலும் யோசித்து முடிவெடுக்க வேண்டுமென்று சொல் லும் கும்ப இராசி வாசகர்களே!**

ஆவணி மாதக்கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் விரயாதிபதி சனி, விரயஸ்தானத்திலேயே வக்கிரம் பெற்றிருக்கிறார். எனவே வரவும் செலவும் சமமாகும்.

**சிம்ம - சூரியன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு சப்தம ஸ்தானத்திற்கு அதிபதியான சூரியன், சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது தேங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும். செல்வநிலை திருப்தி தரும். சுபகாரியங்கள் நடைபெறும். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆத

ரவு கிடைக்கும். வெளிநாட்டில் பணிபுரிய அழைப்புகள் வரலாம். குடும்பத்தில் நிலவிய வாக்குவாதம் சுமுகமாகும். பெற்றோரின் உடல்நலம் சீராகும்.

**கன்னி - புதன் சஞ்சாரம்**

ஆவணி 8 ஆம் திகதி கன்னி இராசிக்குச் செல்லும் புதன், அங்கு உச்சம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு பஞ்சம அஷ்டமாதிபதியான புதன், உச்சம் பெறும் போது பிள்ளைகள் வழியில் சுபச்செலவு ஏற்படும். பாகப்பிரிவினையில் இருந்த தடை அகலும். பணிபுரியும் இடத்தில் தொல்லை தந்த மேலதிகாரிகள் இடமாற்றம் பெறுவர்.

**வக்கிர புதன் சஞ்சாரம்**

ஆவணி 12 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு புதன் வக்கிர இயக்கத்தில் செல்கிறார். உங்கள் இராசிக்கு பஞ்சம அஷ்டமாதிபதியான புதன் வக்கிரம் பெறுவதால் நன்மையும் தீமையும்

உழைப்பிற் கேற்ற பலன் கிடைக்காது.

**சிம்ம - சுக்கிரன் சஞ்சாரம்**

ஆவணி 16 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 4, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன், சப்தம ஸ்தானத்திற்கு வருவது யோகம்தான். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். குடும்பச்சுமை கூடுதலாக




இருந்தாலும், அதைச் சமாளிக்கும் ஆற்றல் பிறக்கும். அலுவலகத்தில் கேட்டிருந்த சலுகைகள் கிடைக்கப்பெறும். பொதுவாழ்

குருவும் சனியும் வக்கிரமாக இருக்கிறார்கள். உங்கள் இராசிக்கு தன ஸ்தானம் மற்றும் இலாப ஸ்தானத்திற்கு அதிபதியான குரு வக்கிரம் பெறும்போது பொருளாதார பற்றாக்குறை ஏற்படும். கொடுக்கல் -வாங்கலில் பிரச்சினைகள் உருவாகும். சனியின் வக்கிர இயக்கத்தைப் பொறுத்தவரை நன்மை தரக்கூடியதாக இருக்கும். விரயாதிபதி சனி வக்கிரம் பெறும் போது, வீடு கட்டுவது, இடம் வாங்குவது போன்றவற்றில் கவனம் செலுத்துவீர்கள். கடன்சுமை ஓரளவு குறையும். இந்த மாதம் சனிக்கிழமை தோறும் கிருஷ்ணர் வழிபாடு நன்மையைத் தரும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் விரயங்கள் அதிகரிக்கும். வீடு மாற்றம், இடமாற்றம் உருவாகலாம். கணவன் - மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடு மறையும்.

## பிள்ளைகள் வழியில் சுபச் செலவு ஏற்படும்!

கலந்தே நடைபெறும். பிள்ளைகளால் சில பிரச்சினைகள் தலை தூக்கும். அவர்களை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள். அண்ணன், தம்பிகளுக்குள் அனுசரணை அவசியம். உத்தியோகத்தில் வீண் பழிகள் ஏற்படலாம்.

வில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் கிடைக்கலாம்.

**குரு வக்கிரமும் சனி வக்கிரமும்**

மாதம் முழுவதும்

பிள்ளைகளுக்கு படிப்பிற்கேற்ற வேலை கிடைக்கும். பணிபுரியும் பெண்களுக்கு, புதிய இடத்தில் இருந்து வேலை வாய்ப்புகள் வரலாம். ஏழரைச் சனியில் விரயச் சனியின் ஆதிக்கம் நடைபெறுவதால் புதிய வேலையில் சேரலாமா? என்பதை சுய ஜாதகம் பார்த்து முடிவெடுங்கள்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**சுறுசுறுப்பாகச் செயற்பட்டு சொல்லை செயலாக்கிக் காட்டும் மீன இராசி வாசகர்களே!**

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் குரு வக்கிர இயக்கத்தில் இருப்பதால் ஆரோக்கியத் தொல்லைகள் அதிகரிக்கும். எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது.

யால் அவதிப்படுவீர்கள். ஒருகடனை அடைக்க மற்றொரு கடன் வாங்கும் சூழல் உருவாகும். பணிபுரியும் இடத்தில் பக்குவமாக நடந்துகொள்ளுங்கள்.

**கன்னி - புதன் சஞ்சாரம்**

ஆவணி 8 ஆம் திகதி கன்னி இராசிக்குச் செல்லும் புதன், அங்கு உச்சம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு 4,7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். 7 இற்கு அதிபதி உச்சம் பெறுவது யோகம்தான். கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். நல்ல சந்தர்ப்பங்கள் இல்லம் தேடிவரும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள்.

**வக்கிர புதன் சஞ்சாரம்**

ஆவணி 12 ஆம் திகதி, சிம்ம இராசிக்குப் புதன் வக்கிர இயக்கத்தில் செல்கிறார். உங்கள் இராசிக்கு

வாங்கும் யோகம் உண்டு. வீடு மாற்றம், ஊர் மாற்றம் ஏற்படலாம்.

**சிம்ம - சுக்கிரன் சஞ்சாரம்**

ஆவணி 16 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன்,




6 ஆம் இடத்திற்கு வருவது யோகமான நேரம்தான். தொட்டது துலங்கும். தொழில் முன்னேற்றம் ஏற்படும். எதிர்பாராத நல்ல வாய்ப்புகள் வந்து சேரும். பெண் பிள்ளைகளின்

மாதம் முழுவதும் குருவும், சனியும் வக்கிரத்தில் இருக்கிறார்கள். உங்கள் இராசிநாதன் குரு வக்கிர இயக்கத்தில் இருக்கும் இந்த நேரத்தில் ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். அடுத்தவர்களுக்கு நீங்கள் நன்மை செய்தாலும் அது தீமையாகவே தெரியும். குடும்பப் பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். சனியின் வக்கிர காலம் நன்மையைத் தரும், என்றாலும் விரயங்கள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்காது. இந்த மாதம் வியாழக்கிழமை தோறும் அல்லது சுவாதி நட்சத்திரம் அன்று நரசிம்மரை வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் உங்கள் இராசிநாதன் வக்கிரம் பெற்றிருப்பதால், எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. திடீர் திருப்பங்கள் வந்து சேரும். கொடுக்கல்- வாங்கல்களில் கவனம் தேவை. ஆரோக்கியத் தொல்லை வந்து

## நல்ல சந்தர்ப்பங்கள் இல்லம் தேடி வரும்!

**சிம்ம - சூரியன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 6ஆம் இடத்திற்கு அதிபதியான சூரியன், மாதம் முழுவதும் 6 ஆம் இடத்திலேயே சஞ்சரிக்கிறார். எனவே மறைமுக எதிர்ப்புகள் அதிகரிக்கும். மனக்கவலை ஏற்படும். ஆரோக்கியத் தொல்லை

கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் புதன் என்பதால், இந்த கால கட்டத்தில் நற்பலன்கள் கிடைக்கும். இல்லத்தில் மங்கல ஓசை கேட்கும். பயணங்களால் பலன் கிடைக்கும். உத்தியோக மாற்றம் பற்றி சிந்தித்தவர்களுக்கு, நல்ல தகவல் கிடைக்கும். வி[illegible]

சுபச்சடங்குகள் நடைபெறும். இழப்புகளை ஈடுகட்ட புதிய வாய்ப்புகள் வந்து சேரும். உத்தியோகத்தில் பணி நிரந்தரமாக வாய்ப்புண்டு.

**குரு வக்கிரமும் சனி வக்கிரமும்**

போகும். கணவன் - மனைவிக்குள் அனுசரித்துச் செல்வதன் மூலமே குடும்பம் அமைதி காணும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்ளுங்கள். பணிபுரியும் பெண்களுக்கு கேட்ட சலுகைகள் கிடைக்கும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் சிந்தனையை மறைக்க வேண்டாம். நேர்மையான முறையில் வெளிப்படையாகப் பேசுங்கள். – ஹோமர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பல்கலைக்கழகப் பட்டம் என்பது அரச நியமனத்திற்காயிற்றே!

பொருளாதாரத்தில் நாடு ஆட்டம் கண்ட போதுதான் உண்மை நிலையை அரசாங்கம் உணரத் தலைப்பட்டுள்ளது.

அதில் ஒரு விடயம்தான் அரச நியமனம் என்பதாகும்.

அரச சேவையில் உள்ள பலர் திறமை யற்றவர்கள் என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர பகிரங்கமாகக் கூறியுள்ளார்.

இதேவேளை மேலதிகமான ஆளணியி னர் அரச சேவையில் இடம்பெற்றுள்ளனர் என்ற தகவலையும் அரச தரப்புக் கூறி வரு கிறது.

இதேநேரம் வேலை செய்யாத அரச ஊழி யர்கள் உடனடியாக வீடு செல்லுங்கள் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோபத்து டன் கூறியுள்ளார்.

இந்த அடிப்படையில் அரச சேவையில் இருக்கக்கூடிய பலர் திறமையற்றவர்கள் என்று அமைச்சர் காஞ்சன விஜேசேகர கூறி யிருப்பதை அடியோடு நிராகரிக்க முடியாத தாயினும் அதனை சற்றுச் செம்மைப்படுத்திக் கூறுவதாயின், வேலை செய்யும் மனநிலை யற்றவர்களாக அரச ஊழியர்கள் பலர் உள்ள னர் என்பதே பொருத்துடையதாகும்.

உண்மை, அரச சேவையில் இணைந்து விட்டால், தாம் பொதுமக்களுக்குச் சேவை செய்வதற்காக நியமிக்கப்பட்டவர்கள் என் பதை அரச சேவையாளர்கள் பலர் மறந்து விடுகின்றனர்.

மாறாக, அரச நியமனத்தினூடாக அவர் களுக்கு வழங்கப்பட்ட கடமைப்பொறுப்பை தமக்கான அதிகாரமாகக் கருதி, பொதுமக் களுக்கு உரிய சேவை கிடைக்காமல் செய் வதிலும் அரச சேவையாளர்களில் ஒரு பகுதி யினர் ஈடுபடுகின்றனர்.

இவ்வாறான உத்தியோகத்தர்கள், கடமை யைச் செய்கின்றவர்களையும் தடுப்பவர் களாக – தேவையற்ற கதைகளைக் கதைத்து அலுவலகக் கட்டமைப்பை குழப்பி விடுபவர் களாக இருக்கின்றனர் என்பது மறுக்க முடி யாத உண்மை.

இதுதவிர, அதிகாரிகளுக்குப் பந்தம் பிடித்து சம்பந்தப்பட்ட நிறுவனத்தை வினைத்திற னற்றதாக ஆக்கி விடுவதிலும் அரச உத்தி யோகத்தர்களில் ஒரு பகுதியினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இந்த வகையில் அரச உத்தியோகத்தகர் கள் குறித்த, அமைச்சர்களின் கருத்துக்கள் இப்போது பேசுபடு பொருளாகியுள்ளது.

எதுஎவ்வாறாயினும் அத்தியாவசிய – அத்தியாவசியமற்ற அரச சேவை என்று வகுக்கக்கூடிய வகையில், அரச நியமனம் இருப்பது மிகவும் துரதிர்ஷ்டவசமானது.

அரச சேவை என்றாலே அது அத்தியா வசியமானதாகவே இருக்க வேண்டும்.

இதைவிடுத்து பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற அனைவருக்கும் அரச நியமனம் வழங்கு வது என்ற அரச கொள்கையாலும் தேர்தல் நோக்கிய அரசியலாலும் இன்று நாடு கந்தறு நிலைக்கு வந்துவிட்டது.

அதாவது பல்கலைக்கழகப் பட்டம் பெற் றால் அவர்களுக்கு அரச வேலை வழங்கு வது கட்டாயம் என்பதான நிலைமையை ஆட்சியாளர்கள் தோற்றுவித்ததால், பட்டதாரி கள் அனைவரும் அரச சேவையில் இருந்து காலத்தை அவமே கழிக்கின்றனர்.

உண்மையில் பல்கல்லைக்கழகப் பட்டதாரி கள் சுயதொழில் முயற்சிகளில், விவசாயத் தில், பெருந்தோட்டச் செய்கையில், கடல்வளப் பயன்பாட்டில், புத்துருவாக்க முயற்சியில், ஏற்றுமதித் தொழில்சார் விடயங்களில் ஈடுபடு கின்றதான ஏற்பாடுகள் இருந்திருக்குமாயின் இந்த நாட்டின் பொருளாதார நிலைமை உச்சமான நிலையில் இருந்திருக்கும் என்பது தான் உண்மை.

இந்த உண்மையை இனியேனும் ஆட்சி யாளர்கள் உணர்ந்து செயலாற்ற வேண்டும்.

# இந்திய மீனவர்கள் கைது இராமேஸ்வர மீனவர்கள் வேலை நிறுத்தப் போராட்டம்

(இராமேஸ்வரம்)

எல்லை தாண்டி மீன் பிடித்ததாக இலங்கை கட ற்படையால் கைது செய் யப்பட்ட இராமேஸ்வரம் மீனவர்கள் 6 பேரையும் உடனடியாக படகுடன் விடுதலை செய்ய வேண் டும் என்ற கோரிக் கையை வலியுறுத்தி இன்று முதல் இராமேஸ் வரம் மீனவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அறி வித்துள்ளனர்.

மீனவர்களின் இந்த வேலை நிறுத்தப் போரா ட்டத்தால் இராமேஸ்வர த்தில் உள்ள சுமார் 800 க்கும் மேற்பட்ட விசைப் படகுகள் கரையில் நங் கூரமிட்டு நிறுத்தப்பட்டு ள்ளது என இராமேஸ் வரம் விசைப்படகு உரி மையாளர் சங்கத் தலை வர் ஜேசுராஜா தெரிவித் தார்.

நேற்று முன்தினம் மாலை இராமேஸ்வர த்தில் இருந்து சென்ற 6 மீனவர்களையும் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக இலங்கை கட ற்படையினர்கைது செய்து தலைமன்னார் அழை த்துச் சென்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை வேலை நிறுத்தத்தால் மீனவர் கள் மற்றும் மீன்பிடி சார்பு தொழிலாளர் சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட் டோர் வேலை இழந்துள் ளதோடு நாளொன்றுக்கு 50 இலட்சம் ரூபாய் வரை நஷ்டம் ஏற்படும் எனவும் குறிப்பிடப்பட் டுள்ளது. (4)

## போதைப்பொருள் விற்பனை முதன்மை சந்தேகநபர் கைது

(அராலி)

யாழ்ப்பாணத்தில் ஹெரோயின் போதைப் பொருளை விற்பனை செய்து வந்தார் என தேட ப்பட்டு வந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்த னர்.

நேற்று கோண்டா வில் ரயில் நிலையத்தில் வைத்து அதே இடத்தைச் சேர்ந்த 27 வயதுடை யவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்

சந்தேகநபரிடமிரு ந்து 5 கிராம் ஹெரோ யின் போதைப்பொருள் மற்றும் போதைப்பொ ருள் வியாபாரத்தில் பெற் றுக் கொண்ட 75 ஆயிரம் ரூபாய் பணம் என்பன கைப்பற்றப்பட்டன.

யாழ்ப்பாணம் பிரா ந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இய ங்கும் தலைமை பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்சிஸ் தலை மையிலான மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரே இந்த கைது நடவடிக்கையை முன் னெடுத்தனர்.

யாழ்ப்பாணத்தில் ஹெரோயின் போதைப் பொருளை விற்பனை செய்யும் முதன்மை சந் தேக நபரே நீண்ட நாட் கள் தேடப்பட்டு வந்த நிலையில் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரி வித்தனர். (4-104)

## இலங்கையில் பிறப்பு வீதத்தில் வீழ்ச்சி

(கொழும்பு)

இலங்கையில் பிறப்பு வீதத்தில் வீழ்ச்சி பதிவா கியுள்ளதாக குடிசன மதி ப்பீட்டு புள்ளிவிபரவியல் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய் யும் போது 2021 ஆம் ஆண்டில் குழந்தைகள் பிறப்பு 16,858 இல் குறைவடைந்துள்ளது.

கடந்த 2020 ஆம் ஆண்டில் 301, 707 பிறப் புக்கள் பதிவாகியிருந்த துடன் 2021 ஆம் ஆண் டில் இந்த எண்ணிக்கை 284; 848 ஆக வீழ்ச்சிய டைந்துள்ளது.

இதன்படி, 2021 ஆம் ஆண்டில் பிறப்பு வீதம் 12.9 வீதமாக குறைவ டைந்துள்ளது.

பெண் பிள்ளைகளை விடவும் ஆண் பிள்ளை கள் அதிகளவில் பிறந் துள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

2021 ஆம் ஆண்டில் கொவிட் பெருந்தொற்று காரணமாக இவ்வாறு குழந்தை பிறப்புக்கள் குறைவடைந்துள்ளதாக குடிசன் மதிப்பீட்டு புள்ளி விபரவியல் திணைக் களம் தெரிவித்துள் ளது. (4)

## எரிபொருள் தட்டுப்பாடு குறித்த வதந்திகளை நம்ப வேண்டாம்

### பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

(கொழும்பு)

டீசல், பெற்றோல் மற் றும் மண்ணெண்ணெய் தட்டுப்பாடு இன்றி வழங் குவதற்கு போதுமான அளவு இருப்பு காணப் படுவதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

தட்டுப்பாடு குறித்த வத ந்திகளை நம்ப வேண் டாம் இலங்கை பெற்றோ லியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

சபுகஸ்கந்த சுத்திக ரிப்பு நிலையத்தில் அனைத்து வகையான எரிபொருட்களும் உற் பத்தி செய்யப்படுவதா கவும் கொலன்னாவ மற் றும் முத்துராஜவெல முனையங்களில் இறக்கு மதி செய்யப்பட்ட எரி பொருள் போதுமான அளவு இருப்புக்கள் இரு ப்பதாகவும் CPC தெரி வித்துள்ளது. (4)

## மே 9 வன்முறைச் சம்பவம் மேலும் மூன்று பேர் கைது

(கொழும்பு)

மே 9 வன்முறை சம் பவங்களுடன் தொடர்பு டைய மேலும் மூவர் கைது செய்யப்பட்டுள்ள தாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த மே 9 ஆம் திகதி நடைபெற்ற அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் பின்னர் இடம்பெற்ற வன் முறைகளின் போது பாரா ளுமன்ற உறுப்பினர்க ளான மிலான் ஜயதில க்க, லசந்த அழகியவ ன்ன அருந்திக்க பெர்னா ண்டோ ஆகியோரின் வீடுகள், வாகனங்கள் மற்றும் காரியாலயங்கள் உட்பட சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை தொடர்பில் குறித்த மூவர் கைது செய்யப்பட்டுள்ள னர்.

இவ்வாறு கைது செய் யப்பட்டவர்கள் 53, 26, 30 வயதுடைய கிரிந்தி வெல ஊரபொல மற் றும் லிஹினியாகம பிரதேசங்களைச் சேர் ந்தவர்கள் என பொலி ஸார் தெரிவித்துள்ளார் கள்.

சம்பவம் தொடர்பில் மேல் மாகாண குற்ற த்தடுப்புப் பிரிவினர் மற் றும் தங்கொட்டுவ பொலி ஸார் மேலதிக விசார ணைகளை முன்னெடுத் துள்ளதாக பொலிஸ் ஊட கப் பிரிவு மேலும் தெரி வித்துள்ளது. (4)

## நாட்டையே கழுவி ஊற்றும் நிலை ஏற்பட்டுள்ளது- சஜித்

(கொழும்பு)

எதிர்க்கட்சியை அரசு கழுவி ஊற்றினாலும் இன்று நாட்டையே கழுவி ஊற்றும் நிலை ஏற்பட்டு ள்ளது என்று எதிர்க்கட் சித் தலைவர் சஜித் பிரே மதாஸ தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் யாப்பஹுவ தொகுதிக் கூட்டத்தில் உரையாற் றும்போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரி வித்ததாவது,

"சர்வகட்சி அரசு என் பது புதிய புரளியாகும். சர்வகட்சி அரசு என்று கூறும் அரசு ஏன் ஐக்கிய மக்கள் சக்தியை ஆதரி த்த உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கு எதி ராக ஒழுக்காற்று விசார ணைகளை மேற்கொள் கின்றது?

தற்போதைய தேவை பதவிகளைப் பகிர்ந்து கொள்வதல்ல. நாங்கள் ஒருபோதும் திருடர்களுடன் சேர்ந்து அமைச்சுப் பதவிகளை ஏற்கமாட்டோம்.

ஆனால், அரசு நாட் டுக்கு நல்ல விடயங்க ளைச் செய்யும்போது அத ற்கு ஆதரவளிப்போம்.

தேங்காய் எண் ணெய், சீனி, பூண்டு மோசடிகள் மட்டுமன்றி கழிவுப்பொருள் கப்பலு க்குப் பணம் கொடுத்த மோசடிகளையும் உட னடியாக அம்பலப்படுத்த வேண்டும்" எனத் தெரி வித்தார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள தடையால் சுற்றுலாத்துறை பாதிக்கும் அபாயம்

(கொழும்பு)

இலங்கைக்கான இறக்குமதித் தடையால் சுற்றுலாத்துறை பாதிக்கும் அபாயம் உள்ளதாக சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் 300 இற்கும் அதிகமான பொருட்களுக்கான இறக்குமதித் தடையை அரசாங்கம் தடை விதித்து இருந்தது.

இந்த இறக்குமதிக் கட்டுப்பாடுகள் காரணமாக எதிர்காலத்தில் கழிவறை திசுக்கள் உட்பட பல சுகாதாரப் பொருட்களுக்கு கடுமையான தட்டுப்பாடு ஏற்படக் கூடும் என சந்தை வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

விதிக்கப்பட்டுள்ள இறக்குமதிக் கட்டுப்பாடுகள் காரணமாக குறித்த பொருட்களுக்குத் தேவையான மூலப்பொருட்களை இலங்கைக்குள் இறக்குமதி செய்ய முடியாது எனவும் இதனால் அரசாங்க மருத்துவமனைகள், தனியார் மருத்துவமனைகள், விமான நிறுவனங்கள், ஹோட்டல்கள் போன்றவற்றின் சுகாதார சேவைகளை பேண முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும், இந்த ஆண்டு 10 இலட்சம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை நாட்டிற்கு வரவழைக்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வரும் வேளையில், இந்த இறக்குமதித் தடை நடைமுறைப்படுத்தப்பட்டமையினால், எதிர்காலத்தில் சுற்றுலாத்துறைக்கு பாரிய பாதிப்பு ஏற்படும் அபாயம் உள்ளது.

தற்போதைய கொரோனாத் தொற்றுநோய் சூழ்நிலையில் இலங்கை மக்கள் தங்கள் தனிப்பட்ட சுகாதாரத்தில் அதிக கவனம் செலுத்தி வரும் நிலையில் குறித்த தயாரிப்புகள் அத்தியாவசியமான ஒன்றாக மாறியுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# பெண் தலைமைத்துவ குடும்பங்களின் சவால்களை தீர்க்க நடவடிக்கை

(நெளுக்குளம்)

யுத்தத்திற்குப் பின்னர் சமூகத்தில் பெண் தலைமைக் குடும்பங்கள் எதிர்நோக்கும் சவால்களை மக்கள் திட்டம் ஒன்றியத்தின் பிரதிநிதிகளால் தேசிய மட்டத்திற்கு எடுத்துச் செல்ல நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக நேற்று வவுனியா எழுதுவினைஞர் சங்க மண்டபத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது மக்கள் திட்ட ஒன்றியத்தின் பிரதிநிதிகளினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பெண் தலைமை குடும்பங்கள் அரசியல்வாதிகளை எதிர்பார்த்து காத்திருக்காமல் சுயதொழில், விவசாயம் போன்றவற்றில் தம்மை ஈடுபடுத்தி கொள்ளவும் அந்நடவடிக்கைகளுக்கு தமது பிரதிநிதிகள் வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் வழங்குவதற்காகவே மக்கள் திட்ட ஒன்றியத்தை தேசிய வேலைத்திட்டமாக முன்னெடுப்பதற்குரிய வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருவதாகவும் இலங்கையின் பல பகுதிகளுக்கும் சென்று இவ்வாறான கலந்துரையாடல்களை முன்னெடுத்து வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (4- 299)


# கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவர் படுகொலை

(கொழும்பு)

களுத்துறை - மத்துகம, பின்னகொட பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நபர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. பிறிதொரு நபருடன் ஏற்பட்ட வாய்த்தர்க்கமே கொலைக்கான காரணம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கூரிய ஆயுதத்தினால் தாக்குதலுக்கு உள்ளாகிபலத்த காயமடைந்த நபர் வென்னேவ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மதுகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (4)



இ.நா.ஸ்ரீ ஞானேஸ்வரன் எழுதிய "பன்னாட்டுக் குற்றங்கள்" எனும் நூலின் வெளியீட்டு நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் யாழ்.பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறைத்தலைவர் பேராசிரியர் சி.ரகுராம் தலைமையில் நடைபெற்றது.

(படம் - ரவிசாந், சிவசாந்தன்)

# பெரும் இயற்கை அனர்த்தத்தை எதிர்கொள்ளவுள்ள மன்னார்

## பொது அமைப்புக்கள் ஒன்றியத் தலைவர் மன். அரச அதிபருக்கு கடிதம்

(மன்னார்)

மன்னார் தீவுப் பகுதியானது பெரும் இயற்கை அனர்த்தத்தை எதிர்கொள்ள நேரிடலாம் என துறைசார்ந்த நிபுணர்கள் எச்சரிப்பதால் மக்கள் மத்தியிலே அச்சநிலை தோன்றியுள்ள நிலையில் காற்றாலை அமைத்தலும் கனிய மணல் அகழ்வும் தொடர்வதால் இது தொடர்பாக கலந்துரையாடலுக்கான நடவடிக்கையை உடன் மேற்கொள்ள வேண்டும் என அரச அதிபருக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் வி.எஸ்.சிவகரன் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருக்கு காற்றாலை மற்றும் கனிய மண் தொடர்பாக நேற்று முன்தினம் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில்,

மன்னார் தீவுப்பகுதியில் ஏலவே முப்பது காற்றாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

தற்போது 21 காற்றாலைகள் அமைக்கும் பணி தொடங்கியுள்ளன.

பெருநிலப்பரப்பில் மாதிரி கிராமம் தொடக்கம் முள்ளிக்குளம் வரை முப்பத்து எட்டு காற்றாலைகள் அமைக்கும் பணி தொடங்கியுள்ளது.

இதற்கு அப்பால் அதானியின் நிறுவனமும் காற்றாலை அமைக்கும் பணியை தொடங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் பரீட்சாத்திரமாக தொடங்கப்பட்ட கனிய மண் அகழ்வு பல ஆயிரக் கணக்காக துளையிட்டு மாதிரிகள் பெறப்பட்டுள்ளதாக அறிகின்றோம்.

மன்னார் தீவுப் பகுதியானது கடல் மட்டத்தில் இருந்து மிகவும் உயரம் குறைந்த நில அமைப்பைக் கொண்டதாகும். இவ்வித மாமான செயற்பாட்டால் மன்னார் தீவுப் பகுதியானது பெரும் இயற்கை அனர்த்தத்தை எதிர்கொள்ள நேரிடலாம்எனதுறைசார்ந்த நிபுணர்கள் எச்சரிப்பதால் மக்கள் மத்தியிலே அச்சநிலை தோன்றியுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-285)




## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 350 | 330 | 320 |
| உருளைக்கிழங்கு | 200 | 210 | 200 | 220 |
| பச்சைமிளகாய் | 450 | 350 | 450 | 450 |
| தக்காளி | 300 | 200 | 120 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 290 | 250 |
| கோவா | 450 | 450 | 450 | 450 |
| கரட் | 300 | 360 | 380 | 440 |
| பூசணி | 150 | 100 | 120 | 120 |
| புடோல் | 230 | 180 | 140 | 200 |
| வாழைக்காய் | 240 | 170 | 150 | 120 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 200-500 | 400 |
| பெரிய வெங்காயம் | 200 | 190 | 170 | 200 |
| பாகற்காய் | 500 | 300 | 440 | 400 |
| வெண்டிக்காய் | 400 | 120 | 90 | 200 |
| கருணைக் கிழங்கு | 160 | 200 | 240 | 240 |
| பயற்றங்காய் | 300 | 350 | 250 | 200 |
| லீக்ஸ் | 350 | 260 | 270 | 300 |
| பீற்றூட் | 160 | 150 | 170 | 200 |
| கறிமிளகாய் | 800 | 700 | 650 | 600 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 400 | 300 |
| போஞ்சி | 450 | 300 | 370 | 400 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | -- | 300 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 150 | 120 |
| தேசிக்காய் | 350 | 300 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 40-80 | 60-90 |
| இராசவள்ளி | 240 | 250 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 300 | 300 | 350 | 400 |
| முள்ளங்கி | 120 | 120 | 140 | 240 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 25 | 90 | 50 | 40 |
| ஈரப்பலா | 120 | 80 | 80 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய...

மீனவர்கள் 6 பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன் அவர்களின் இழுவைப் படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட ஆறு இந்திய மீனவர்களும் தற்போது தலைமன்னார் கடற்படையினரால் தடுத்து வைக்கப் பட்டுள்ளதுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மன்னார் கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப் படவுள்ளனர். (4-7)

## பரீட்சைப் பெறு...

மாத இறுதி வாரத்தில் வெளியிடப்படும் என முன்னதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்திருந்தது.

இந்த பெறுபேறுகளை பரீட்சைகள் திணைக்களத்தின் https://www.doenets.lk/examresults என்ற இணையத்தள பக்கத்தில் பார்வையிடலாம்.

உயர்தரப்பரீட்சைக்கு 2 இலட்சத்து 72 ஆயிரத்து 682 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்த நிலையில், 49 பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி தர்மசேன வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

## யாழ்.மத்திய...

பரீட்சை முடிவுகளின் அடிப் படையில் யாழ்.மாவட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி மாணவன் கணிதப் பிரிவில் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளார். (4-7)

## எலிக்...

னுவச் சிப்பாய் ஒருவர் எலிக்காய்ச்சல் நோயினால் பீடிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கீரிமலை இராணுவ முகாமில் கடமையாற்றிவரும் குறித்த சிப்பாய் கடந்த 22ஆம் திகதி எலிக்காய்ச்சல் நோயினால் பீடிக்கப்பட்ட நிலையில், முன்னதாக பலாலி இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

பின்னர் அங்கிருந்த மேலதிக சிகிச்சைக்காக கடந்த 25ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் மறுநாள் 26ஆம் திகதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (4-7,33)

## 62.9 சதவீதம்...

கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றுள்ளதாக திணைக்களம் அறிவித்துள்ளது. (4-7)

## மட்டக்களப்பு...

தேசிய ரீதியில் சாதனை படைத்து மட்டக்களப்பு மண்ணிற்கு பெருமை சேர்த்துள்ளார். (4-7)

## இந்திய நிதி...

ஒகஸ்ட் 17ஆம் திகதி கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இந்தியாவின் உதவியைக் கோரி அவர் இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமனிற்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இதேவிடயம் தொடர்பில் இலங்கை வெளிவிவகார அமைச்சு இந்திய தூதரகத்திற்கு ஆவணமொன்றை அனுப்பி வைத்துள்ளது.

இதேவேளை இலங்கைக்கு கடன் வழங்கிய ஏனைய நாடுகளிற்கும் ஜனாதிபதி இவ்வாறான கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார் என அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (4-7)

## வாழ்வக...

ரீகம், வரலாறு ஆகிய பாடங்களில் 3ஏ சித்தி பெற்று யாழ். மாவட்டத்தில் முதலி டம் பெற்றுள்ளதுடன் தேசிய ரீதியில் 22ஆவது இடத்தைப் பெற்றுள்ளார்.

அத்துடன் மற்றுமொரு மாணவன் ஜெ.ராஜ்குமார் 2சிஎஸ் பெறுபேறு பெற்று சித்தியடைந்துள்ளார். (4-7)

## இலங்கைக்கு...

யில் கொண்டுவரப்படவுள்ள இந்தப் பிரேரணைக்கு அமெரிக்கா, கனடா, ஜேர்மன், வடக்கு மசிடோனியா, மலாவி, மொன்ரி நீக்ரோ ஆகிய நாடுகள் இணை அனுசரணை வழங்கவுள்ளன.

மேலும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத் தொடரில் இலங்கையின் பொறுப்புக்கூறலை வலியுறுத்தி நிறைவேற்றப்பட்ட 46/1பிரேரணை இந்தக் கூட்டத் தொடருடன் காலாவதியாகவுள்ள நிலையில் புதிய பிரேரணை ஒன்றை மீண்டும் கொண்டுவந்து நிறைவேற்றுவதற்கு இணை அனுசரணை நாடுகள் தீர்மானித்துள்ளன. (4-7)

## முதல் மூன்று...

அந்தவகையில் எஸ்.சிவாம்சன், பி.அபிராம், ஏ.ஹர்சன் ஆகியோரே முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களை பெற்றுள்ளனர். (4-7)

## இடைக்கால பட்ஜெட்

# இம்முறை மக்களுக்கு வரப்பிரசாதம்

## ஐ.தே.க தெரிவிப்பு

(கொழும்பு)

வறிய மக்களின் மேம்பாட்டுக்கு முக்கியத்துவம் வழங்கும் அதே வேளை வரித் திருத்தங்களுடன் கூடிய மக்களை அபிவிருத்தி செய்யும் வரவு செலவுத் திட்டத்தை ஜனாதிபதி இம்முறை சமர்ப்பிக்க உள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் 76ஆவது ஆண்டு விழா தொடர்பாக காலியில் மக்களுக்கு தெளிவுபடுத்தும் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

வீதிகள், கட்டடங்களை நிர்மாணிக்க இந்த வரவு செலவுத்திட்டம் முன்வைக்கப்படவில்லை. சாப்பிடவும் உடுத்தவும் இல்லாது இருக்கும் மக்களுக்கு ஒரு வாய் சோறு மற்றும் ஆடைகளை அணிவதற்கான முறையை அறிமுகப்படுத்தவே வரவு செலவுத் திட்டத்தை ஜனாதிபதி கொண்டு வருகிறார் எனத் தெரிவித்தார். (4-7)

## அரசியல்...

லியா, பிரான்ஸ் உட்பட நான்கு நாடுகளில் உள்ள புலம்பெயர் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

கனேடிய அமைப்பு ரோய் சமாதானம் என்பவரால் வழிநடத்தப்பட்டது. அவர் நிரபராதியாகி விடுவிக்கப்படுவதற்கு முன்னர் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதன்போது தமிழ் புலம்பெயர் சமூகம் விவாதங்களைத் தொடர இரண்டு முக்கிய நிபந்தனைகளை முன் வைத்துள்ளது.

அரசியல் கைதிகளை விடுதலை செய்தல் மற்றும் வடக்கு, கிழக்கில் பொது மக்கள் துன்புறுத்தப்படுவதை நிறுத்துதல் என்பன அவையாகும்.

அத்துடன் புலம்பெயர் பிரதிநிதிகள் வடக்கு மற்றும் கிழக்கில் பாதுகாப்பு தரப்பினரால் பலவந்தமாக காணி சுவீகரிப்பு விடயத்தையும் எழுப்பியிருந்தனர்.

இந்தக் கலந்துரையாடலை அடுத்து புலம்பெயர் தமிழ் மக்கள் பிரதிநிதிகள் முன்வைக்கும் பிரச்சினைகள் தொடர்பில ஆராய முன்னாள் பிரதம நீதியரசர் அசோக டி சில்வா தலைமையில் மூவரடங்கிய குழுவொன்றை நீதி மற்றும் சிறைச்சாலை விவகார அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ நியமித்துள்ளார். (4-7)


தன நிதானய — திகதி 2022.08.28 — சீட்டிழுப்பு இலக்கம் 891 — A 25 45 60 74

மஹஜன சம்பத — திகதி 2022/08/28 — சீட்டிழுப்பு இலக்கம் 4861 — R 4 1 9 6 1 0

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2022.08.28 — சீட்டிழுப்பு இலக்கம் 170 — சிம்மம் 15 45 47 56 சிம்மம்

மெகா பவர் — திகதி 28/08/2022 — சீட்டிழுப்பு இலக்கம் 1209 — F 08 27 31 38 75

கொவிசெத — திகதி 2022.08.28 — சீட்டிழுப்பு இலக்கம் 3103 — M 05 31 57 70

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 1836 — நிறம் சிவப்பு — சீட்டிழுப்பு திகதி 2022.08.28 — தினம் ஞாயிற்றுக்கிழமை — S 19 50 67 75 — வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,806,160/-

சனிதா — ஞாயிற்றுக்கிழமை — சீட்டிழுப்பு திகதி : 2022.08.28 — சீட்டிழுப்பு இல : 3997 — ரூ. 3,925,600/- — 13 28 38 57 S

சசிரி — சீட்டிழுப்பு வாரம் 215 — சீட்டிழுப்பு திகதி 2022.08.28 — ஞாயிற்றுக்கிழமை — 05 14 28 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,823,520/-

ரச்சி — சுப்பர் ஜக்பொட் ரூ. 3,472,116.60 — திகதி 2022-08-28 — வெற்றி வாரம் 3548 — 36 49 52 58 — மகரம் — வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 6,239,280/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — M 31 16 30 47 65 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 256,724,671/- — 1012 — 2022.08.28 — தொலைபேசி: 011-2 333 546-47 — Web : www.dlb.lk

அத கோடிபதி — ஞாயிற்றுக்கிழமை — சீட்டிழுப்பு இல: 1662 — சீட்டிழுப்பு திகதி : 2022.08.28 — ரூ. 2,732,400/- — 25 27 56 59 E


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து ஊர்காவற்றுறை செல்லும் பிரதான வீதியில் பிரசித்தி பெற்ற மண்கும்பான் வீரகத்தி பிள்ளையார் கோயில் அருகாமையில் **33** பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு**

- சாட்டி கடற்கரைக்கு செல்லும் பிரதான வீதியில் அமைந்துள்ளது.
- யாழ்.நகரில் இருந்து 8Km தூரத்தில் உள்ளது.
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல் வீடுகள் அமைப்பதற்கும் களஞ்சிய சாலைகள் அமைப்பதற்கும் திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம்.

**பார்வையிடும் நேரம்**

**காலை 6.00 மணி தொடக்கம்**
**மாலை 6.00 மணி வரை**

**தரகர் தேவையில்லை.**

(12587)

தொடர்புகளுக்கு:- ஜெயம்

**077 814 7389**
**077 241 7589**

---

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (12579)

**076 825 7716** (ஆகாஸ்)

---

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

*வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.*

தொடர்பு: **றாஜ் - 077 679 6623** (12595)

---

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603, 076 097 3127**

---

## காணி விற்பனைக்கு

58/1, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (பலாலி வீதி, திருநெல்வேலி கெற்றப்போல் சந்தியிலிருந்து பழம் வீதியில் சுமார் 200 m தூரம் அளவில்) (C-4766)

தொலைபேசி:
**077 977 3732**

---

## ENGLISH
## ஆங்கிலம்

**பிரத்தியேக வகுப்புகள் உங்கள் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.**

**077 658 9443**
யாழ்ப்பாணம் (12596)

---

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் உள்ள பிரபல்யமான புடவை விற்பனை நிலையத்திற்கு அனுபவம் உள்ள பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை. மேலும் சிட்டை எழுதுனர் (பில் கிளார்க்) இருபாலாரும் விரும்பத்தக்கது. (12598)

**076 659 5578**

---

பயிற்சியுடன் உடனடி **வேலை வாய்ப்பு**

**A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி**



**விமானப் பயணச்சீட்டுக்கள்**
**விரைவுப் பொதிகள் சேவை**
**விசா சேவைகள்** **V2 TRAVELS** (C-4807)

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம் • கோப்பாய் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • கொடிகாமம் • புத்தூர் • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • பண்டத்தரிப்பு • சங்கானை • புதுக்குடியிருப்பு • திருகோணமலை

- பயிற்சிக்கால ஊக்கத்தொகை -20,000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- வேலையின்போது ஆரம்ப சம்பளம் -35,000/-

49A, கப்பல் லேன் யாழ்ப்பாணம். **0777-068-777**

---

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 12 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு

- **இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்**
- **கைதடி சந்தியில் இருந்து 750M தூரத்தில்**
- **A9 வீதியில் இருந்து இரண்டாவது காணி**
- **நல்ல தண்ணீர் ஊற்று நிலம்**
- **குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி**

தொடர்புகளுக்கு:-

**076 755 8606**
**077 259 0391**

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 51 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு

- நான்கு பரப்பாகவும் இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் காரைநகர் செல்லும் பிரதான வீதி முகப்புடன் (காபற் வீதி)
- 784 இலக்க போக்குவரத்து பேருந்துகள் அதிகம் செல்லும் வீதி
- பொன்னாலை ரவுண்டப்போட் சந்தியில் இருந்து 1 km தூரத்தில்
- வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி (Jaffna College) இருந்து 1 km தூரத்தில்
- ஒரு பரப்பின் (நிலப்பரப்பு) விலை இரண்டு இலட்சம் மட்டும்

தொடர்புகளுக்கு:-

**077 911 6983**
**077 148 8348**

யாழ்ப்பாணம் புத்தூரில் 168 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு

- இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- பருத்தித்துறை வீதியில் இருந்து 1 ½ Km தூரத்தில்
- சோமஸ்கந்தா கல்லூரியில் இருந்து 1 ½ Km தூரத்தில்
- புத்தூர் சந்தியில் இருந்து (பருத்தித்துறை வீதி) மட்டுவில் செல்லும் பிரதான வீதியில் (காபற் வீதி) இருந்து இரண்டாவது காணி
- 775 இலக்க போக்குவரத்து பேருந்துகள் செல்லும் காபற் வீதி
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்
- விவசாயம் செய்வதற்கும் வீடுகள் அமைப்பதற்கும் உகந்த காணி
- ஒரு பரப்பின் (நிலப்பரப்பு) விலை இரண்டு இலட்சம் மட்டும்

(12555)

தொடர்புகளுக்கு:-

**077 658 5999**
**076 438 5814**
**077 874 8135**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org